**சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம் - 2022**

---

சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 28 ஆம் திகதிய 5915–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஐ பீ (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தல் முகவராக உள்ளது. இலங்கையிலுள்ள வறுமை மற்றும் பாதிப்பிற்குள்ளான குழுக்களின் நலன்களிற்காக சமூக பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்படுத்தப்பட்ட சமத்துவம், வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றிற்கு பங்களிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,949 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியன் தொகையானதுடன் செயற்திட்டத்தின் முழுக் கிரயமும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூரத்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டு 2023 யூன் 30 வரை நீடித்திருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற

கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிச் செயலாற்றல்

### 2.1 செயற்திட்டத்தின் நிதி நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் பேரேட்டுக் கணக்குகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. எதிர்காலத்தில் அவதானிப்பின் பிரகாரம் சீர்செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | பேரேட்டுக் கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய ரூபா 174 மில்லியன் தொகையான மூன்று உருப்படிகள் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றிற்கு சீராக்கப்பட்டிருந்தன, எனினும் அது தொடர்புடைய பேரேட்டு கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கூறு ஒன்று மற்றும் இரண்டு தொடர்பாக னுடுஜ இன் பூர்த்தி செய்தல் மீது பெறப்பட்ட தொகை வெளிநாட்டு வளங்கள் திணைக்கள அறிக்கையின் பிரகாரம் சீர்செய்யப்பட்டுள்ளது. | தொடர்புடைய சீராக்கப் பதிவுகள் சரியாகப் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | இச் செயற்திட்டம் 2022 மார்ச் 31 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2023 யூன் வரை ஓராண்டுக்கு மேல் நீடிக்கப்பட்டதால், 2022 ஏப்ரல் முதல் 2023 மார்ச் வரையிலான காலப்பகுதிக்கான செயற்திட்டத்திற்கான மேலதிக நிர்வாக கிரயம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது ரூபா 9.7 மில்லியன் தொகையாகும். அந்தத் தொகையில் ரூபா 7.5 மில்லியன் அல்லது 78 சதவீதம் செயற்திட்ட பதவியணியினருக்கான ஆளணி வேதனங்கள் மற்றும் மேலதிக நேர படிகளுக்காக செலுத்தப்பட்டது. | இணங்கப்பட்டது. ஆனால் செயற்திட்டம் 2023 யூன் வரை நீட்டிக்கப்பட்டதுடன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இது மேலதிக நிர்வாக கிரயம் அல்ல. | கிரய செயற்திறன் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

**2.2 நிதிகளின் பயன்பாடு**

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 115 மில்லியன் தொகையான கடப்பட்டுக் கட்டணங்கள் கடன் வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | மொத்த ஒதுக்கீட்டு நிதிகளையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இச் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 75 மில்லியன் ஆகும், இதில் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கு ஐ.அ.டொலர் 12.7 மில்லியன் நிதியேற்பாடு காணப்பட்டது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 31.82 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.122 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது 2022 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டில் 0.96 சதவீதம் மாத்திரமே ஆகும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | குறித்துரைக்கப்பட்டவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து ஒதுக்கீட்டு நிதியை அதிகபட்சமாக பயன்படுத்துதல் வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

| கூறு/ செயற்பாடு/ உப செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| 03 – அமுல்ப்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் திட்டமிடல் ஆகியவற்றிற்கான ஆதரவு. | தீவில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய வகையில் வெளிப்படையான, நியாயமான மற்றும் திறமையான முறையில் மானியங்களை வழங்குவதற்கு பொருத்தமான எண்ணிக்கையிலான குடும்பங்களைத் தெரிவு செய்தல். | (டை) | எதிர்பார்க்கப்படும் செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு ஒருங்கிணைந்த சமூக நலன்புரி முகாமைத்துவ முறைமையை தயாரிப்பதற்காக 2022 ஆகஸ்ட் 10 இல் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் இந்த வேலை 2023 ஏப்ரல் 10 இற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் செயற்திட்ட காலப்பகுதி 2023 யூன் 30 இல் முடிவடையும் என | ஐறுஆளு அபிவிருத்தி தொகுதிகளை (அழனரடநள) பூர்த்தி செய்வதற்கு முன்னர் முறைமை அமுல்ப்படுத்துதலின் காரணமாக ஆரம்ப செயன்முறை மாற்றப்பட்டது. உள்நாட்டில் உருவாக்கப்பட்ட முறைமையை பயன்படுத்தி தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. தற்போதுள்ள முறைமையை ஐறுஆளு இற்கு மாற்றி நலன்புரி நலன் கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியான | அனைத்து இலக்குகளையும் குறித்துரைக்கப்பட்டவாறு அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டியலிடப்பட்டுள்ளது. எனினும் இந்த கணனி முறைமை 2023 யூன் 23 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நபர்களை இனங்காண்பதற்காக அனைத்து தொகுதிகளையும் பயன்படுத்துவதற்கு றுடீட ஆல் முடிவு எடுக்கப்பட்டது. | |
| (ஹை) | ஒருங்கிணைந்த சமூக நலன்புரி முகாமைத்துவ முறைமையை (ஐறுஆளு) தயாரிப்பதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 25 மில்லியன் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் தொடர்பாக வழங்கப்பட்ட செயலாற்றல் உத்தரவாதம் 2023 மார்ச் 31 இல் காலாவதியாகியிருந்தது, மேலும் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த முறைமைக்கான நிதிச் செயலாற்றல் 2023 யூன் 23 இல் உள்ளவாறு ரூபா 4.5 மில்லியன் அல்லது மொத்த ஒப்பந்த பெறுமதியில் 20 சதவீதம் ஆகும். | செயலாற்றல் பிணைமுறிக்கு ஆலோசனை சேவை தேவைப்படவில்லை. ஆலோசனை பெறுகை வழிகாட்டலிலும் மேற்படி தேவைப்பாடு குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், நுழுஐ மற்றும் சுநுீ ஆகிய இரண்டு ஆவணங்களும் கோரப்பட்ட நேரத்தில் செயலாற்றல் பிணைமுறியொன்றிற்காக கோரப்படவில்லை. எனினும், ஒப்பந்தத்தை வழங்கிய பின்னரும் ஞஞுே ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கான ஆரம்ப நம்பகத்தன்மையின் ஒரு நடவடிக்கையாக ஆலோசகரிடம் இருந்து செயலாற்றல் பிணைமுறியை கோரியது, அவர்கள் கோரிக்கையின் பேரில் ஆலோசனைக் காலத்திற்கு அதை வழங்கினர். | கோரிக்கையின் படி செலாற்றல் உத்தரவாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், அனைத்து இலக்குகளையும் குறித்துரைக்கப்பட்டவாறு அடைந்துகொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |